Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.102/2022 Date:28.01.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW10)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. மரிய பாக்கியம் | Village | பேரையூர் |
| Father/ Husband Name | ரத்தினம் முத்து | Taluk | பேரையூர் |
| Age | 49 /2026 | Calling | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 28.01.2026 TIME 12.40 **PM**

**1–வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது பேரையூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2021–ம் தேதி 16.00 மணிக்கு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலைய பெண் காவலர் திருமதி. சுமதி நிலைய பொறுப்பில் இருந்த போது, நிலையத்தில் ஆஜராகி முகமது ஜமீர் என்பவரின் மனைவி நஷீரின் பாத்திமா என்பவர் கொடுத்த புகாரை பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 1/2021 இதச பிரிவு 498(A), 406 and 4, 6 of DP Act கீழ் படி வழக்கு பதிவு செய்தார். பின்னர் அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கும், சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு, வழக்கு கோப்பை விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் நஷீரின் பாத்திமா, அஜ்மல்கான், ராபியா பேகம், முகமது அசாருதீன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சையது அப்தாகீர், பசீர் அகமது ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து பின்னர் சாட்சிகள் சையது அப்தாகீர், பசீர் அகமது, பெண் காவலர் 1888 சுமதி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் மாண்புமிகு தேனி மாவட்ட முதன்னை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. மேற்படி வழக்கில் வரதட்சணை கொடுமை உள்ளதா என விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி, மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து, வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் மங்கையர்திலகம் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். புகார் **அ.சா.ஆ.3,** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4**, பார்வை மகஜர் **அ.சா.ஆ.5**, மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

**வரதட்சணை சம்மந்தமாக புகார் பெற்றால் அதன் மீது சமூக நல அலுவலரிடம் அறிக்கை பெற்ற பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபடும் என்றால் சரிதான். அத்தகைய நடைமுறை இவ்வழக்கில் கடைப்பிடிக்கப்பட்டதா என்றால் இல்லை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம், பின்னர் வரதட்சணை கொடுமை குறித்து மட்டும் சமூக நல அலுவலரிடம் அறிக்கை**

பெறவேண்டும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் 05.11.2020–ம் தேதி நான் சமூக நலத்துறைக்கு இவ்வழக்கு சம்மந்தமாக அறிக்கை பெறவேண்டி அனுப்பியது என்றால் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் இக்கடிதம் அனுப்பினேன். என்னுடைய விசாரணையில் மேற்படி விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சமூக நலத்துறையினரிடம் இருந்து அறிக்கை வராததால் குறிப்பிடவில்லை. சமூக நல அலுவலர் விசாரித்து குடும்ப வன்முறை மற்றும் வரதட்சணை கொடுமை இல்லை என அறிக்கை எங்களது காவல்நிலையத்திற்கு அனுப்பியுள்ளதை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை விசாரித்து, இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், ஆட்கள் இல்லாததால் சாட்சியாக போடவில்லை. எங்களது காவல்நிலையத்தில் 3 புகார்கள் கொடுக்கப்பட்டதா என்றால் ஒரு புகார் தான் கொடுக்கப்பட்டது, மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து ஒரு புகார் வரப்பெற்றது.

2) காவல் நிலையத்தில் வைத்து எதிரிகள் ரூ.18 லட்சத்தை அ.சா.1 க்கு கொடுப்பதாக ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. 1–வது எதிரி வேறு திருமணம் செய்து கொண்டாரா என்பதை குறித்து ஜமாத் நபர்களை விசாரித்தேனா என்றால் இல்லை. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், அவசர கதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், முதற் கட்ட விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று பார்வையிடாமல் ஆவணங்களை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.